<u>தொழிலாளர் நீதிமன்றம். காஞ்சிபுரம்</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **ID.No.** | **:** | 84/2024 | சாட்சியம் | **:** | **WW1** |
| **Name** | **:** | திரு.செல்வராஜ் | | | |
| **Date** | **:** | **11.11.2025** | | | |
| **Time** | **:** | **11.53 a.m to12.12 p.m** | | | |

<u>தொ.த.சா.1.திரு.செல்வராஜ் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். குறுக்கு விசாரணை</u>

எனக்கு தற்சமயம் 59 வயது ஆகிறது. எதிர்மனுதாரர் ராஜம் Hotel Private limited என்ற குழும நிறுவனத்தின் ஒரு அங்கம் என்றால் சரி. எதிர்மனுதாரர் நிறுவனத்தில் 150 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்து வருகிறார்கள் என்றால சரிதான். நான் கம்பெனியில் வேலை பார்த்து வந்த காலத்தில் வருங்கால வைப்பு நிதி தொகை பிடித்து வந்தார்கள் என்றால் ஆமாம். நான் வேலைக்கு சேர்ந்த காலகட்டத்தில் இருந்தே பிடித்தம் செய்து வருகிறார்கள் என்றால் ஆமாம். என்னை 2015 இல் ஸ்டோர்ஸ் பிரிவிற்கு மாற்றம் செய்தார்கள் என்றால் ஆமாம். நான் கடைசியாக ஜனவரி-2023 ல் வேலைக்கு போனேன் என்றால் ஆமாம். எதிர்மனுதாரர் நிறுவனத்தில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் தான் ஊதிய உயர்வு வழங்குவார்கள் என்றால் ஆமாம். ஜனவரி-2023-ற்கு பிறகு

எந்த மாதம் சென்று நான் எனக்கு சம்பளம் கேட்டேன் என்றால் பிப்ரவரியிலிருந்து எனக்கு வேலை வேண்டும் என இரண்டு மூன்று மாதங்கள் தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தேன் அப்போது சம்பளமும் கேட்டேன். இந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமூல சாட்சியத்தில் சொல்லி உள்ளேன். மனுவிலும் சொல்லி உள்ளேன். மனுவில் சொல்லவில்லை என்றால் ஆமாம். பிரமாண வாக்குமூலத்தில் எந்த இடத்தில் சொல்லி உள்ளேன் என்றால் எந்த மாதம் போனேன் என குறிப்பிட்டு சொல்லவில்லை. 02.08.2023 அன்று வந்து ஜனவரி மாத ஊதியத்தை நான் கேட்டதாக நிர்வாகம் பதில் உரையில் சொல்லி உள்ளது என்றால் ஞாபகம் இல்லை. நான் சம்பளம் கேட்க போனபோது ஏன் ஜனவரி மாதத்திற்கு பிறகு வேலைக்கு வரவில்லை என நிர்வாகம் என்னிடம் கேட்டதா என்றால் இல்லை. ஸ்டோர்ஸ் பிரிவில் நான் வேலை பார்த்தபோது சில முறைகேடுகள் நடந்தது பற்றி நிர்வாகம் என்னிடம் ஜனவரி 2023 கேள்வி கேட்க தொடங்கிய பிறகு தான் நான் வேலைக்கு வருவதை நிறுத்திவிட்டதாக நிர்வாகம் சொல்லியுள்ளது பற்றி தெரியுமா என்றால் அது போன்று என்னிடம் விசாரணை எதுவும் நிர்வாகத் தரப்பில் மேற்கொள்ளப்படவில்லை. ஜனவரி 2023 ல் நிர்வாகம் என்னை விசாரிக்க முற்பட தொடங்கியதில் இருந்து நான் வேலைக்கு போவதை நிறுத்திவிட்டு ஆகஸ்ட் 2023 ல் சென்று ஜனவரி மாதத்திற்கான ஊதியத்தை கேட்டேன் என்றால் அவ்வாறு இல்லை. பிப்ரவரி 7 ஆம் தேதி

நிர்வாகம் என்னை வேலையில் இருந்து நீக்கியது என்பது தான் என் வழக்கு என்றால் ஆமாம். 23.04.2024 அன்று தான் தொழிலாளர் ஆணையர் முன்பு சமரசத்திற்கான மனு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். இடைப்பட்ட காலத்தில் நிர்வாகம் 07.02.2023 ல் என்னை பணியிலிருந்து நீக்கி விட்டதாக தெரிவித்து வேலை கேட்டு அணுகினேனா என்றால் இல்லை. நான் மனு தாக்கல் செய்த பிறகு நிர்வாகம் அவர்களுக்கு சொந்தமான சோப் பேக்டரி அல்லது ஓசூரில் உள்ள அம்யூஸ்மென்ட் பார்க்கில் வேலை செய்ய தயாராக இருக்கீறீர்களா என கேட்டார்கள் என்றால் ஆமாம். நான் எனக்கு தங்குவதற்கான வசதியும் அதிகமான ஊதியமும் போக்குவரத்து செலவு கொடுத்தால் தான் சேர்வேன் என சொன்னேன் என்றால் ஆமாம். தொழிலாளர் ஆணையரிடமும் நிர்வாக தரப்பில் எங்கு வேலை காலியாக இருக்கிறதோ அங்கு வேலை கொடுக்க தயாராக இருப்பதாக தெரிவித்தார்கள் என்றால் ஆமாம். நிர்வாகம் என்னை பணி நீக்கம் செய்யவில்லை என்றாலும் ஜனவரி 2023 ல் இருந்து நான்தான் வேலைக்கு வராமல் இருந்துவிட்டேன் என்றாலும் தவறு. நிர்வாகம் தொடர்ச்சியாக எனது அவர்களுக்கு சொந்தமான வெவ்வேறு கிளைகளில் வேலை கொடுக்க தயாராக தான் இருந்தார்கள் என்றாலும் நான் தான் ஒவ்வொரு காரணத்திற்காக வேலைக்கு சேராமல் இருந்து விட்டேன் என்றாலும்

தவறு. எனக்கு 58 வயது பூர்த்தியாகி விட்ட காரணத்தினால் எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

S SUJATHA
Digitally signed by S SUJATHA
Date: 2025.11.11 18:13:57 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.
Dated:11.11.2025.